DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | |
|---|---|---|
| O.S. No. | : | 55/2019 |
| Deposition of witness | : | பி.சா–1 |
| Name | : | மூர்த்தி குமார் |
| Father’s /Husband Name | : | முனிசாமி |
| Village/Town | : | |
| Taluk | : | |
| Age | : | |
| Occupation | : | |

*Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act,1969 (Act 44 of 1969).* 08-12-2022

**முதல் விசாரணை**

நான் 5 ஆம் பிரதிவாதி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு விவரம் தெரியும். எனது தரப்பு முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

வழக்கு விவரம் கோப்பின் அடிப்படையில் தெரியும். 22/09/2015 தேதியிட்டு வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு பற்றிய விவரம் பற்றி எனக்கு தெரியாது. 1, 2 பிரதிவாதிகள் எங்கள் அலுவலகத்தில் மோசடியாக தானசெட்டில்மெண்ட் பதிவு செய்துவிட்டதாகவும், அதனடிப்படையில் கிரய பத்திரங்கள் எழுதிகொடுக்க போவதாகவும், அந்த ஆவணங்கள் பதிவு செய்யக்கூடாது என்று வா.சா.ஆ.10 அனுப்பப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கும்பகோணம் மாவட்ட பதிவாளர் அலுவலகத்திற்கு வாதியால் அறிவிப்பு அனுப்பப்பட்டு அதற்கு கும்பகோணம் மாவட்ட பதிவாளர் வாரிசு சான்றிதழ் அடிப்படையில் தான செட்டில்மெண்ட் ஆவணம் பதிவு செய்யப்பட்டுவிட்டதாகவும், தரப்பினர்கள் தங்களுக்குரிய உரிமையை நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளலாம் என்று பதில் கொடுத்துள்ளார்கள் என்றும், அது எங்கள் அலுவலகத்திற்கு ஒரு நகல் அனுப்பப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். மேற்படி அறிவிப்பிற்கு பின்னர் 07/03/2016 ஆம் தேதி 1 ஆம் பிரதிவாதி 3 ஆம் பிரதிவாதி பெயருக்கு ஒரு கிரய ஆவணம் எங்கள் அலுவலகத்தில் பதிவு செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

அதன்பிறகு வாதி மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் மேற்சொன்ன ஆவணங்கள் குறித்து விசாரணை செய்ய வேண்டும் என்று ரிட்மனு தாக்கல் செய்த விவரம் தெரியாது. ரிட்மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படி கும்பகோணம் மாவட்ட பதிவாளர் விசாரணை செய்து, வாரிசு அடிப்படையில் ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக 23/12/2016 ஆம் தேதி அறிக்கை கொடுத்துள்ளார் என்றால் சரிதான். லால்குடி சார் பதிவாளர் அலுவலகத்தில் எங்கள் அலுவலக எல்லைக்குள் உள்ள சொத்து சம்மந்தமாக ஆவணங்கள் பதிவு செய்தால் எங்கள் அலுவலகத்தில் அந்த சொத்து சம்மந்தமாக பற்றுகை உத்தரவு உள்ளதா, வேறு ஏதேனும் வில்லங்கம் உள்ளதா என்று கடிதம் மூலம் கேட்பார்கள் என்றால் சரிதான். இவ்வளவு நடவடிக்கைக்கு பிறகும் லால்குடி சார் பதிவாளர் அலுவலகத்தில் 12/12/2017 அன்று 3 ஆம் பிரதிவாதி, 4 ஆம் பிரதிவாதி பெயருக்கு கிரய பத்திரம், தாவா சொத்து குறித்து பதிவு செய்துள்ளார் என்றால் சரிதான். எங்கள் அலுவலகத்தில் நடந்த நடவடிக்கை சம்மந்தமான விவரங்களை 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக லால்குடி சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வேண்டும் என்றே தெரிவிக்காமல் இருந்துவிட்டோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்தில் இவ்வளவு வில்லங்கம் ஏற்படுவதற்கு 5 ஆம் பிரதிவாதி அலுவலகமும் காரணமும் என்றால் சரியல்ல.

ஒப்பம்(xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

ஒப்பம்(xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

**/உண்மை நகல்/**
ஒப்பம்(xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.